# பித்தன் கே.எம்.எம் ஷா வின் சிறுகதைகளில் பெண்கள்
# The Women in Piththan K.M.M. Sha's Short Stories

**M.J. Irfana**
Department of languages
South Eastern University of Sri Lanka
Fathimairfana2627@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இன்று உலகளாவிய ரீதியில் பெண்கள் தொடர்பான கருத்தாக்கங்கள் அதிகம் நிலவி வருகின்றன. பெண்கள் குறித்து கவனம் செலுத்தும், அதிகம் பேசுகின்ற துறைகளுள் இலக்கியத்திற்கு தனியிடம் உண்டு. இவை, பெண்களின் சமூகவியல்சார் பங்குகள், பிரச்சினைகள், வகிபாகங்கள், என்பனவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளன; அளிக்கின்றன. அவற்றுள், 20 நூற்றாண்டு ஈழத்து இலக்கியங்களில், குறிப்பாக சிறுகதைகள், பெண்கள் தொடர்பான விடயங்களில் கூடுதல் கவனம் எடுத்து வருகின்றன. பெண்கள் பற்றி பேசுகின்ற சிறுகதை என்ற அடிப்படையில் பித்தனின் கதைகள் இங்கே கவனிக்கப்படக் கூடியவை. அந்தவகையில் பித்தன் கே.எம்.எம் ஷா என்பவரின் சிறுகதைகள் உள்ளடங்கிய 'பித்தன் கதைகள்' எனும் தொகுப்பு நூலில், பெண்கள் குறித்த பார்வைகள் எவ்வாறானது என்பதைக் கண்டறிவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இவரது படைப்புக்கள், பெரும்பாலும் பெண்களை மையப்படுத்தியதாகவும் அல்லது அவர்களை பின்னணியாகக் கொண்டதாகவுமே அமையப் பெற்றுள்ளன. இதற்கு உதாரணமாக 'பாதிக்குழந்தை','அமைதி','பைத்தியக்காரன்','இருட்டறை' போன்றவற்றை குறிப்பிட முடியும். சமூகத் தளத்தில் பெண்கள் குறித்த பார்வை பற்றிய மதிப்பீட்டில் பித்தன்கே.எம்.எம். ஷா வின் சிறுகதைகள் பங்கெடுக்கும் பாங்கை சம காலத்துக்கு ஏற்ற அடிப்படையில் ஆராய்தல் எனும் நோக்கிற்கு அமைவாக இவ் ஆய்வு ஆராயப்பட்டுள்ளது. மேலும் 1950/60 களில் எழுதப்பட்ட இச் சிறுகதைகள் சம காலத்து பெண்கள் சார் நிகழ்வுகளுடன் பொருந்துகின்றனவா எனும் ஆய்வுப்பிரச்சினையின் கீழ், முதலாம், இரண்டாம் நிலை தரவுகளை அடிப்படையாகக் கொண்டதோர் சமூகவியல், விவரணவியல் அணுகுமுறையிலான ஆய்வாகவும் இவ்வாய்வானது அமைந்துள்ளது.

***பிரதான சொற்பதங்கள்:*** *பெண்கள், பித்தன் ஷா, சிறுகதைகள்*

## ஆய்வு அறிமுகம்

ஈழத்து முஸ்லிம் சிறுகதை மலர்ச்சியானது, 1940 ம் ஆண்டுகளுக்கு பின்னர் இருந்து முறையான வளர்ச்சியை தொடுகின்றது. ஆரம்பத்தில் 'ஹைதர்சா சரிதம்' என்னும் சிறுகதையே ஈழத்தின் முதல் முஸ்லிம் சிறுகதையாக வெளிவந்தது. இது ஐதுறுஸ் லெப்பை மரைக்கார் என்பரினால் எழுதப்பட்டது. இருப்பினும் சிறுகதைக்குரிய வடிவப் பொருத்தமுடன், அதற்குரிய பண்புகளைக் கொண்டதுமான சிறுகதைகள் பிற்பட்ட காலங்களிலேயே வெளியாகின. இது பித்தன் கே.எம்.எம் ஷாவின் இலக்கிய நுழைவையடுத்தே முனைப்புப் பெற்றது. அந்த வகையில் ஈழத்து சிறுகதை வரலாற்றில் திருப்புமுனையாகத் திகழும் பித்தன் ஷா என அழைக்கப்படும் கலந்தர் லெப்பை முஹம்மது மீரா ஷா காத்திரமானதோர் படைப்பாளியாவார்.

புதுமைப்பித்தனின் வாரிசுகளில் ஒருவரான இவர், யதார்த்த'" ர்வமற்ற கதைகளை பலர் எழுதிக்கொண்டிருந்த காலகட்டத்தில், சமுதாய அவலங்களை எடுத்துக்காட்டும் வித்தியாச போக்கினை கையாண்டு கதைகளை எழுதினார். 1950/60 ஆம் ஆண்டு காலப்பகுதியின் சமுதாய அவலங்கள், அதன் நம்பிக்கை சார்ந்த போக்குகள், அவற்றின் நெளிவுசுளிவுகள் என்பனவற்றை யதார்த்தத்துடன் படைத்தவர்களுள் பித்தன் ஷாவுக்கு முக்கிய பங்குண்டு.

இவரது சிறுகதைகள் மேமன் கவியின் முயற்சியினால் 1995 மார்ச் மாதத்தில் 'பித்தன் கதைகள்' எனும் தொகுப்பு நூலாக வெளிவந்தது. இது மல்லிகைப்பந்தலின் பத்தாவது வெளியீட்டு பிரசுரம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நூலானது கலைஞனின் தியாகம், பயங்கரப்பாதை, ஆண்மகன், பாதிக்குழந்தை, அமைதி, ஊதுகுழல் உள்ளிட்ட பதினாறு சிறுகதைகளை உள்ளடக்கியுள்ளன. இவை பித்தனின் சிறுகதையாக்கு திறன்களை வெளிப்படுத்த போதிய சான்றுகளாகும். இக் கதைகளில் வர்க்க முரண்பாடு, அரசியல் முறைமை, பெண்விடுதலை, பெண்ணடிமைத்துவம், முதலாளித்துவ சிந்தனைகள், இல்லற வாழ்க்கை முறைமை, போன்ற பல்வேறு கதையம்சங்கள் விரவிக் காணப்படுகின்றன. இவை பித்தனது சமூகம் சார்ந்த பார்வையின் அகலத்தினை எடுத்துக்காட்டுகின்றன.

மேற்குறிப்பிட்ட கதையம்சங்களுள் பெண்களின் இயல்புகள், பெண்ணடிமைத்துவம், மற்றும் பெண்விடுதலை போன்ற பெண்ணியச்சிந்தனைகள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதை வெளிக்காட்டுவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. 'பித்தன் கதைகள்' எனும் தொகுப்பு நூல் வெளியீட்டின் போது, இச் சிறுகதைகளில் விரவி நிற்கும் பண்பினை பதிப்பகத்தார் அறிந்து, கதைகளில் அதிகம் நடமாடும் பெண்பாத்திரத்தை நூலின் அட்டைப் பக்கத்தில் பிரஸ்தாபித்தமை பித்தனின் கதைகளில் பெண்கள் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது.
மேலும் இச் சிறுகதைகளில் பெரும்பாலான விடயங்கள் பெண்கள் சார் இயல்புகள், செய்திகள் என்பனவற்றை உள்ளடக்கமாக கொண்டவையாக உள்ளன. அத்துடன் சமூக, உளவியல் மற்றும் இறையியல் சிந்தனைகள் செறிந்தனவாகவும் காணப்படுகின்றன. இவை பெண்கள் தொடர்பான பல்வேறு சிந்தனைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் பேசுவதாகவும் அமைகின்றன.
உதாரணமாக:
பித்தனின் கதைகளில் பேசப்படும் பெண்கள் குறித்து கவனிக்கும் போது பித்தன் கதைகள் எனும் நூலின் முதல் கதையும் மிக நீண்ட காலமாக சர்ச்சைக்குள்ளானதும் ஆன கதைதான் '**பாதிக்குழந்தை**'. இது வரலாற்று " ர்வமாக அமையாது ஒரு பின்னணி கோவையாக தரப்படும் கதையாக இடம்பெற்றுள்ளது. இதில் சுபைதா, ஏழைக்கிழவி, கிழம் செல்வந்த முதலாளி, ஆகிய பாத்திரங்கள் குறித்து பேசப்படுகின்றன. ''சுபைதா, ஏழைக் கிழவியுடன் குடிசையினுள் இருக்கின்றாள் என்பது பற்றிய தெளிவுகள் ஓரிரு வரிகளில் கூறப்பட்டாலும் அவை பற்றிய விபரிப்புக்கள், வாழ்வியல் அம்சங்கள் என்பவை எதுவுமே குறிப்பிடப்படவில்லை.''(*மஹ்ரூப்,எம்.எம். எழுத்தாளர் கே.எம்.எம் ஷா சிறுகதைகள் ஒரு விமர்சன நோக்கு*) ஷாவின் குறிக்கோள் எதுவோ அது குறித்த விடயங்களை மட்டுமே கருவாகக் கொண்டு கதை நகரும் என்பதற்கு இக்கதை நல்ல எடுத்துக்காட்டாகும்.

அந்தவகையில், கிழம் செல்வந்த முதலாளியினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சுபைதாவின் மனக் குமுறல்களும் செய்வதறியா பால்ய பருவமும் உயர் மட்டத்தவர்களின் அடாவடித்தனங்களும் முடிவில் முடிவதுதான் கதி என்ற அவல நிலையையும் மிக உண்மைத்தனமான குரலில் பதிவு செய்கின்ற இக் கதை இந்நிலை தனக்கு ஏற்றபடலாம் என தெரிந்திருந்தும் முதலை வாயில் இருந்து புலியினை நாடிய கதையாகத்தான் முடியும் என்பதை உணர்ந்த சுபைதா மூலம் இளம் பெண்களுக்கு சமூக மட்டத்தில் நிகழும் தவிர்க்க முடியாத நிகழ்வினை படம் பிடித்து காட்டி விடுவதோடு இது போன்ற விடயங்கள் தவிர்க்கப்பட வேண்டியவை என்பதற்கான அறைகூவலாகவும் நகர்கின்றது.

பெண்களுக்கு மிக நீண்ட காலம் தொட்டு விலங்கிடும் அம்சங்களுள் ஒன்றாக அவர்களால் கட்டியாளப்படும் வீணான சாஸ்'திர சம்பிராதயங்களை குறிப்பிடலாம். இவற்றிலிருந்து பெண்கள் விடுபட வேண்டும். வெறுமனே அர்த்தமற்ற போலிக்கட்டுப்பாடுகளையெல்லாம் கடைப்பிடிப்பதில் எவ்வித நிறைவும் வந்துவிடுவதில்லை. அர்த்தமற்ற நடைமுறைகள், சாத்தியமற்ற ஆசாரங்கள் யாவும் தளர்த்தப்பட வேண்டும். என்பதற்கான குரலை ஆழப் பதிவு செய்யும் முகமாக அமைந்த கதையாக **இருட்டறை** யை குறிப்பிட முடியும்

வீணான சாஸத்திர சம்பிராதயங்களை கட்டியாழும் சக்கினா கிழவியை சாடும் முகமாக அவள் போன்ற பெண்களையும் வெளியில் கொண்டு வர முனைகின்றார். கிணற்றுத் தவளைகளாக வீட்டினுள் அடங்கி காலம் கழிப்பது உடைக்கப்பட வேண்டும்; கால மாற்றத்திற்கு ஏற்ப மனிதனும் தன் வாழ்வியலை மாற்றி செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். என்பதை 'காலத்தையும் அதன் மாற்றத்தையும் உணராதவர்கள் அறுபது வருடமென்ன ஆயிரம் வருடங்கள் வாழ்ந்தாலும் அர்த்தமற்ற வாழ்க்கை தான்' என்'று கதையாசிரியர் கூறுவதன் மூலம் பெண்கள் போலியான சாஸ்திர சம்பிராதயங்களை களைய வேண்டும் என்றும் இன்னும் 'ஆகாது' என்று 'ஆக' வேண்டிய வாழ்க்கையை விட்டு இருளில் மறைவது மடமை என்பதையும் வாசகர் மனதில் பதிவு செய்ய விளைவது புரியாமல் இல்லை.

இவ்வாறு தனது கதைகளின் வாயிலாக பெண்கள் தொடர்பான உணர்வுகள், எழுச்சிகள், விழிப்புணர்வுகள், ஏக்கங்கள் என்பனவற்றை வெளிப்படுத்தும் கதைகளுள் **ஊர்வலம்**, **தாகம்** ஆகிய கதைகளையும் குறிப்பிட முடியும் இது சீதனக் கொடுமையால் வாழ்விழக்கும் ஏழைக் குமர்களைப் பற்றியதாக அமைகின்றது. முஸ்லிம் சமூகத்தின் முக்கிய குறைபாடாக இன்றும் தாண்டவமாடும் சீதனப்பிரச்சினைகள் பித்தனால் தெளிவாக எடுத்துறைக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கை முஸ்லிம் சமுதாயத்தின் முக்கிய குறைபாடாக அன்றும் இன்றும் திகழும் பெண்ணடிமைத்துவத்தினைக் குறிப்பிட முடியும். பெண்ணடிமைத்துவத்தினை இஸ்லாம் வரவேற்க வில்லை எனினும் இதனை தவறாக புரிந்து கொள்ளும் சமுதாயக் கட்டுக்கள் இன்னும் அவிழ்க்கப்படவில்லை. இதனை தெளிவு படுத்தும் முகமாக அமைந்த கதைதான் '**அமைதி**'. இக் கதை றஷித் என்னும் பாத்திரத்தை குறிகாட்டியாகக் கொண்டு நகர்கின்றது. கதையில் வரும் றஷித் இன் மனைவி கணவரிடம் நடந்து கொள்ள வேண்டிய முறைமையிலிருந்து சமுதாய பார்வையினைக் காரணம் காட்டி தவறுகின்றாள். இதனால் றஷிதின் எதிர் பார்ப்புக்கள் தவிடுபுடியாகின்றது. ''கணவன் மனைவி என்றால் உறவும் உடலும் மட்டும் தானா? உள்ளத்திற்கு அதில் பங்கு கிடையாதா? இன்று இஸ்லாமிய குடும்பங்கள் இருதயமில்லாத வாழ்க்கை தானே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஊரோடு ஒத்து வாழ வேண்டுமென்பதற்காக நியாயங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமா?''

''இந்த சமூகத்திற்கு என்றொரு அகராதி ஏற்படுத்தினால் அதிலே மனைவி என்ற பெயருக்கு அடிமை என்றுதான் பொருள் கொடுக்க வேண்டிவரும். நம் சமுதாயத்திற்கு வெட்கமே கிடையாது. என்று குறிப்பிடுவது கதையின் மையத்தினை சுட்டி காட்டிவிடுகிறது. பெண்கள் காலம் காலமாக சமூகத்திடம் அடிமைப்பட்டே வருகின்றனர். சமூகத்திற்காக வாழும் பெண்கள் தனக்காக வாழ வேண்டிய வாழ்க்கையை வழியிலே தொலைத்து விடுகின்றனர்''. என பெண்ணடிமைத்துவத்தை இக் கதை வார்ப்பின் வாயிலாக களைய விழைகின்றார்.

இவ்வாறு தனது சிறுகதைகள் மூலமாக பெண்கள் அனுபவிக்கும் வாழ்வியல் சிக்கல்கள், இவர்களால் எதிர் பார்க்கப்படும் அடைவுகள் முதலான பல்வேறு விடயங்களை பெண்ணிலையில் நின்று பேசிறுள்ளார். இதனை இவரது சிறுகதைகளில் நடமாடும் பெண் பாத்திரங்களைக் கொண்டு உணர முடியும்.

**ஆய்வின் கருதுகோள்**

பித்தனின் கதைகள், உருவ, உள்ளடக்க ரீதியில் பல விடயங்களை பேசுகின்றன. அவற்றுள், பெண்கள் சார் பிரச்சினைகள், அவற்றிற்கான தீர்வுகள், ஆண் - பெண் உறவு நிலை, முதலியவற்றை வெளிக் கொண்டு நிற்கும் ஓர் ஆவணமாக இவரது சிறுகதைகள் திகழ்கின்றன. என்பதை கருதுகோளாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வானது பிரதான நோக்கம், துணை நோக்கம், ஆகிய இரு வகை நோக்கங்களை அடிப்படையாக கொண்டுள்ளது.

**பிரதான நோக்கம்**

- சமூகத்தில் பெண்கள் சார் பிரச்சினைகள், தேவைகள் உள்ளிட்ட விடயங்களை ஏனைய துறைகளைப் போன்று இலக்கியங்கள் எவ்வாறு பேசுகின்றன என்பதை பித்தன் கே.எம்.எம். ஷா வின் சிறுகதைகள் ஊடாக கண்டறிதல்.

**துணை நோக்கம்**

- சமூகத்தில் பெண்கள் குறித்த பார்வை பற்றிய மதிப்பீட்டில் பித்தன் கே.எம்.எம். ஷா வின் சிறுகதைகள் பங்கெடுக்கும் பாங்கை சம கால நடப்புக்களுக்கு ஏற்ப ஆராய்தல்.

**ஆய்வு முறையியலும் தகவல் சேகரிப்பும்**

சமூகத்தில் பெண்களின் வாழ்க்கைத்தரம், போராட்டம், வாழ்வியல் சிக்கல்கள் குறித்த பித்தனது கருத்துக்களை மதிப்பீடு செய்யும் வகையில் இவ்வாய்வானது அமைந்துள்ளது.
இதில்

- சமூகவியல் அணுகுமுறை
- விவரணவியல் அணுகுமுறை

முதலியன ஆய்வு அணுகுமுறைகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் தகவல் சேகரிப்புகளுக்காக முதலாம் நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் இவ்வாய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவாக, பித்தனின் பதினாறு சிறுகதைகள் அடங்கிய மூலநூலும் இரண்டாம் நிலைத்தரவுகளாக இது தொடர்பாக எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், நேர்காணல்கள், இணையப்பக்கங்கள், இக்கால தமிழ் இலக்கியநூல்கள், திறனாய்வு நூல்கள் என்பனவும் ஆய்விற்காக எடுக்கப்பட்டுள்ளன.

**ஆய்வுப்பிரச்சினை**

பெண்களின் சம கால நடத்தைகள், முனைப்புக்கள் என்பனவற்றை பேசுவதில் ஏனைய துறைகளைப் போன்று சிறுகதைகளுக்கும் பங்குண்டு. ஆனால்

பெண்ணியம் சார் சிறுகதைகளை விட இன்று பெண்ணியம் சார் கவிதைகளே மலிந்து விட்டன. எனவே பெண்கள் சார் பிரச்சினைகள், இன்னல்கள், இக்கட்டுக்கள், இயல்புகள், என்பனவற்றை வெளிப்படுத்துவதில் சிறுகதைகளுக்குள்ள வகிபாகம் எத்தகையது என்பதை ஆய்வுப்பிரச்சினையாக கொண்டு பித்தனின் கதைகள் இவ்வாய்வில் ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் சுமார் 1950/60 ஆண்டுகளில் எழுதப்பட்ட இச் சிறுகதைகளானது இன்றைய கால பெண்கள் சார் நிகழ்வுகளுடன் எவ்வாறு பொருந்துகின்றன என்பதையும் ஒரு ஆணின் பார்வையில் (கதாசிரியரை மையப்படுத்தி) பெண்கள் குறித்த பார்வை எத்தகையது என்பதையும் ஆராய்வதாக இவ்வாய்வானது அமைந்துள்ளது.

**ஆய்வின் முக்கியத்துவம்**

1950/60 ஆண்டு காலப்பகுதிகளில் முஸ்லிம் சிறுகதைகள் என்ற மதிப்பீடுகளுக்கு அப்பாலும் நின்று நிலவக் கூடிய படைப்புக்களை உலகுக்கு அளித்தவர் பித்தன் ஷா. இவரது படைப்புக்கள் வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, சுதந்திரன், கலைச்செல்வி முதலான பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இருப்பினும் இன்றைய காலத்தில் அவை பற்றிய விமர்சனங்கள், ஆய்வுகள் நூல்கள் என்பவை வெளிவந்ததும் - வெளிவருவதும் குறைவாகவே உள்ளன. ‘‘முஸ்லிம் சமுகத்தின் பின்னணியிலிருந்து கொண்டு கதை எழுதத் தொடங்கியவரும் அத்தகைய சிந்தனையைத் தன் பின்னோருக்கு அளிக்கக் காரணமாக இருந்த பித்தனது படைப்புக்கள் தனித்து ஆராயப்பட வேண்டியவை. பித்தனின் கதைகள் தனியொரு ஆய்வுத் தொகுதியாக நிலை பெறுமாயின் நிச்சயம் தமிழ் இலக்கியத்துறையில் நிலையானதொரு இடத்தைப் பித்தனுக்கு ஈட்டிக் கொடுக்கும்.’’ என்ற எம்.எம்.உவைஸின் கூற்றிற்கிணங்க பித்தனின் சிறுகதைகள் இங்கே ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

பித்தன் சமுதாயத்தின் பிடியில் இருந்து கொண்டு அச் சமூகம் பற்றிய விமர்சனங்கள், சில கொள்கைகள், சம்ரதாயங்கள், என்பனவற்றை பிடிப்பற்றதாக கருதுவதுடன் அவற்றை கட்டியாள்பவர்களை, மாற்றம் நோக்கிய பயணத்திற்கு தன் கதைகள் ஊடாக அழைப்பு விடுப்பவராகவும் திகழ்ந்திருக்கின்றார். மேலும் அவற்றின் சில சந்தர்ப்பங்களில் அவர்களால் பின்பற்றி வரும் அர்த்தமற்ற கொள்கைகளை உலகுக்கு வெளிச்சமிட்டு காட்டுவதையும் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டதை இவரது சிறுகதைகளை வாசிப்பவர் எளிதில் உணரலாம். மேலும் இவரது சிறுகதைகள் மனித சமுதாயத்தின் நேசிப்பின் வெளிப்பாடாக அமைவதை, சமுகத்தில் நிகழும் வெவ்வேறு பிரச்சினைகளை வெவ்வேறாக அணுகுவதில் இருந்து கண்டு கொள்ள முடிகிறது.

இதில் மனித வாழ்வின் சிக்கல்கள், மரபு வழிப்பட்ட வாழ்க்கைநிலை, சமுதாய சிக்கல்கள் என்பன பேசப்பட்டிருப்பதுடன் பெண்ணின் இயல்புகள், குணாதிசயங்கள், அவர்களால் எதிர் கொள்ளப்படும் சவால்கள், எதிர்பார்ப்புக்கள் என்பனவும் யதார்த்தமாகவும் உண்மைத்தனமாகவும் கூறப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பித்தன் ஷா வின் சிறுகதைகளில் பெண்கள் எனும் தலைப்பிலான இவ்வாய்வானது முக்கியம் பெறுகின்றது.

**முடிவுரை**

பித்தனது சிறுகதைகளை ஆழ்ந்து நோக்கும் போது இவரது படைப்புக்களில் பெண் பாத்திரங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துத்தினை நன்கு உணரக்கூடியதாக உள்ளது. பாதிக்குழந்தையில் சுபைதா, தாம்பத்தியத்தில் செல்லம்மா, தாகத்தில் செய்னம்பு, இருட்டறையில் சக்கினா, அமைதியில் றஷீத்

மூலம் சமீமா, ஆண்மகனில் வதனி, ஊர்வலத்தில் ரகுமத்து, ஊதுகுழலில் ராதை ஆகியோரின் மன உணர்வுகள், இயல்பு நிலைமைகள் என்பனவற்றை கொண்டு பெண்கள் குறித்த செய்திகளை பித்தன் தன் சிறுகதைகளில் அழகாக வார்த்துள்ளார். மேலும், பித்தனது கதைகள் பெரும் பாலும் பெண்கள் சமூகத்தில் எதிர் கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள், அவர்களின் அபிலாசைகள், ஏக்கங்கள் என்பனவற்றை சமகால சமூக முனைப்புக்களுடன் பிரதிபலித்துக்காட்டுவதாகவும் அமைந்துள்ளன.

**உசாத்துணைகள்**


1. ஜெமீல்,எஸ்.எச்.எம். காலச்சுவடு, இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்: கல்முனை.

2. காசுபதி நடராசா. (1995). 1994 ம் வருட இலக்கிய இழப்புக்கள், ரீ.பா-கே.எம்.எம். ஷா கரைந்தும் கரையாத காவியம், முத்தமிழ் விழா, கலாசாரப் பேரவை: மண்முனை வடக்கு, மட்டக்களப்பு.

3. உவைஸ், எம். எம். பிறைக்கொழுந்து. உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு: இலங்கை.
4. குணராசா, க . ஈழத்து தமிழ் சிறுகதை வரலாறு. சேமமடு பதிப்பகம்:

5. யோகராசா, செ. (2002). ஈழத்து சிறுகதை முன்னோடி வரிசையில் பித்தன், ஆய்வரங்கக் கோவை, உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு: இலங்கை.

6. ராஜஸ்ரீகாந்தன். (2002). தினகரனும் முஸ்லிம் படைப்பாளிகளும், உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு: இலங்கை.

7. கள்ளிங்காட்டு க(தை)தா நாயகன் பித்தன் ஷா (கலந்தர் லெப்பை முஹம்மது ஷா. Retrieved from http://www.bazeerlanka.com/2011/12/31